நாள்: 02.08.2025

O.S. No.104/2024

**வா.சா.1**

**பெயர்: கல்யாணசுந்தரம், த/பெ. கணபதி**

**<u>1முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா சொத்து எனக்கு நேரிடையாக கிடைத்தற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் பெயரிலுள்ள கணினி சிட்டா தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்றால், என் தந்தை கணபதியாபிள்ளை குஞ்சம்மாள் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர்களிடமிருந்து கடந்த 1964-ல் கிரயம் பெற்றார். என் தந்தை மூலம் எனக்கு கிடைக்கப்பெற்றது. என் தந்தையாருக்கு எத்தனை ஆண், பெண் பிள்ளைகள் என்றால் ஒரு ஆண், இரண்டு பெண்பிள்ளைகள் ஆவார்கள். அதில் எனது சகோதரியான ஒருவர் திருணமத்திற்கு பின் காலமாகிவிட்டார். மற்றொருவர் திருமணமாகி அவர் கணவருடன் மன்னார்குடியில் வசித்து வருகிறார். நான் மட்டுமே ஆண் வாரிசு ஆவேன்.

2. தாவா சொத்தை பொறுத்து என் தந்தையார் அவரது வாரிசுகளிடையே எழுத்து பூர்வமான ஆவணங்கள் எதையும் எழுதி வைத்துள்ளாரா என்றால் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்தை பொறுத்து என் தகப்பனார் எழுதி வைத்துள்ளதாக சொல்லப்படும் ஆவணத்தை பற்றி வழக்குரையில் கூறவில்லை என்றாலும், அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது இந்த

வழக்கிற்கு தேவையில்லாததது என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை பொறுத்து எனக்குள்ள உரிமை மூலம் தொடர்பாக அசல் வழக்கில் எவ்வித சங்கதிகளை நான் கூறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திற்குரிய மூல ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் அனுபவம் என் தந்தைக்கு மாற்றம் பெறவில்லை என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ன் ஆவணத்தில் கண்டுள்ள குஞ்சம்மாள் வகையாறாவின் மூல ஆவணத்தில் தாவா சொத்து பொறுத்து ஏற்ப்பட்டுள்ள சாட்டுதல் நீக்கறவு செய்யப்படாத காரணத்தால் மூல ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், அதனை அனுசரித்து ஏற்பட்ட வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இளவர்களை கட்டுப்படுத்தி சாசனம் செய்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள இளவர்கள் மேஜரான பின்பு Ratification ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்படி Ratification (ஒப்புகை) ஏற்படுத்தப்படாத காரணத்தால் வா.சா.ஆ.1 ஆவணம் முழுமையான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 ஆவணம் முழுமையற்ற ஆவணம் என்பதால் அதன் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படிருப்பது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான புல எண் தெரியுமா என்றால் பழைய புல எண்.99/10 புதிய புல எண்.99/10 ஏ ஆகும். புல எண்.99/10 ல் பூரா விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. புல எண்.99/10 ஏ-ல் மொத்தம் விஸ்தீரணம் 9 1/2 சென்ட் ஆகும். அதில்

எனக்கு 4 3/4 சென்ட் எனக்கு சொந்தமானதாகும். புல எண்.99/10 உட்பிரிவு செய்யப்பட்ட குறித்து ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பொறுத்து எனக்கு எவ்வித உரிமையோ பாத்தியமோ இல்லை என்றாலும் பிரதிவாதிகளின் பாகப்பாத்திய விடுதலை ஆவணத்தில் தாவா சொத்து தவறுதலாக புகுத்தப்பட்டதாக நான் தவறாக கட்சி செய்கிறேன் என்றாலும், இவ்வழக்கிற்கான வழக்கு மூலம் கற்பனையானது என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தல்ல என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண்.99/10 புதிய சர்வே நம்பர் 99/10 ஏ ஆகும். தாவா புல எண் 99/10 ஏ மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 9 1/2 சென்ட் ஆகும். தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் என் தகப்பனார் கிரயம் பெற்று எனக்கு கிடைத்து அனுபவித்து வரும் சொத்தாகும். தாவா புல எண்.99/10 ஏ-ல் அடங்கிய மொத்த சொத்தையும் நான் அனுபவம் செய்து வருகிறேனா என்றால் 4 3/4 சென்டை நான் அனுபவம் செய்து வருகிறேன். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு மேற்படி புல எண்ணில் மீதமுள்ள 4 3/4 சென்ட் அனுபவம் உள்ளது. தாவா சொத்து தொடர்பாக 5 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று 5ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும் 1 முதல் 4 பிரதிவாதிக்கும் இடையேயான 5ம் பிரதிவாதிக்கு தொடர்பில்லாத பிரச்சனைக்காக இந்த 5ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்ததால் இந்த வழக்கு 5ம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்